### அதிகாரம் 7

# பெருவெள்ளத்தின் வருகை

ஏழாம் அதிகாரத்திலும் நோவாவின் வரலாறு மற்றும் உலகத்தின் தண்டனைத்தீர்ப்பு ஆகியவை தொடருகிறது. ஆறாம் அதிகாரம் “தேவன் தனக்குக் கட்டளையிட்டபடி எல்லாம் அவன் செய்து முடித்தான்” (6:22) நோவா கீழ்ப்படிந்தார் எனும் நேர்மறை சொற்றொடருடன் நிறைவு பெறுகிறது. பேழையின் பணிகள் நிறைவு பெற்றபின்னர், பெருவெள்ளத்தினின்று தப்பித்துக் கொள்ள (7:1-10) அதனுள் செல்லும்படியாக அவருக்கு ஆண்டவர் கட்டளையிட்டார் (7:11-16). வெள்ளநீர் பூமி முழுவதையும் நிரப்பி, அதன் மேலுள்ள உயிரினங்கள் யாவற்றையும் அடித்துக் கொண்டு போனது; பேழையில் புகலிடம் கண்டவர்கள் மட்டுமே உயிருடன் தப்பித்தனர் (7:17-24).

## பேழைக்குள் செல்லும்படி தேவனுடைய கட்டளை (7:1-10)

**[1]கர்த்தர் நோவாவை நோக்கி: நீயும் உன் வீட்டார் அனைவரும்
பேழைக்குள் பிரவேசியுங்கள்; இந்தச் சந்ததியில் உன்னை எனக்கு
முன்பாக நீதிமானாகக் கண்டேன். [2]பூமியின்மீதெங்கும் வித்தை
உயிரோடே காக்கும்பொருட்டு, நீ சுத்தமான சகல மிருகங்களிலும்,
ஆணும் பெண்ணுமாக எவ்வேழு ஜோடும், சுத்தமில்லாத மிருகங்களில்
ஆணும் பெண்ணுமாக ஒவ்வொரு ஜோடும், [3]ஆகாயத்துப்
பறவைகளிலும், சேவலும் பேடுமாக எவ்வேழு ஜோடும் உன்னிடத்தில்
சேர்த்துக்கொள். [4]இன்னும் ஏழுநாள் சென்றபின்பு, நாற்பதுநாள் இரவும்
பகலும் பூமியின்மேல் மழையை வருஷிக்கப்பண்ணி, நான்
உண்டாக்கின ஜீவஜந்துக்கள் அனைத்தையும் பூமியின்மேல்
இராதபடிக்கு நிக்கிரகம் பண்ணுவேன் என்றார். [5]நோவா தனக்குக்
கர்த்தர் கட்டளையிட்ட படியெல்லாம் செய்தான். [6]ஜலப்பிரளயம்
பூமியின்மேல் உண்டானபோது, நோவா அறுநூறு வயதாயிருந்தான்.
[7]ஜலப்பிரளயத்துக்குத் தப்பும்படி நோவாவும் அவனுடனேகூட அவன்
குமாரரும், அவன் மனைவியும், அவன் குமாரரின் மனைவிகளும்
பேழைக்குள் பிரவேசித்தார்கள். [8]தேவன் நோவாவுக்குக்
கட்டளையிட்டபடியே, சுத்தமான மிருகங்களிலும், சுத்தமல்லாத
மிருகங்களிலும், பூமியின்மேல் ஊரும் பிராணிகள் எல்லாவற்றிலும்,
[9]ஆணும் பெண்ணும் ஜோடுஜோடாக நோவாவிடத்தில்
பேழைக்குட்பட்டன. [10]ஏழுநாள் சென்றபின்பு பூமியின்மேல்**

**ஜலப்பிரளயம் உண்டாயிற்று.**

**வசனம் 1. பேழையினை** கட்டியெழுப்ப நோவாவிற்கு கட்டளையிட்ட பல ஆண்டுகளுக்கு பின்னர், **ஆண்டவர் அவரை நீதிமானாக கண்டபடியால், நோவாவையும்** அவர் இல்லத் தினரையும் பேழைக்குள் **செல்ல** கட்டளையிட்டார். இந்த வெளிப்பாடு ஆதியாகமம் 6:5ல் ஆண்டவர் கண்டதாக கூறப்பட்டுள்ள பொல்லாப்பிற்கும் 6:11ல் கூறப்பட்டுள்ள "சீர்கெட்டதாகவும்" அழிவு நிறைந்ததாகவும் கண்ட உண்மையாக சூழலுக்கும் எதிரானதாக உள்ளது. ஆண்டவர் நோவாவை "நீதிமானாகக் கண்டார்" என மீண்டும் கூறப்பட்டுள்ளது. இப்படி கூறுவது நோவா பேழையினை கட்ட கீழ்ப்படிந்ததினால் அவர் ஆண்டவரின் கண்களுக்கு முன்பாக நீதிமான் நிற்கும் தகுதியினை பெற்றார் என பொருளாகாது.

**வசனங்கள் 2, 3. பூமியின்மீதெங்கும் வித்தை உயிரோடே காக்கும்பொருட்டு, நீ சுத்தமான சகல மிருகங்களிலும், ஆணும் பெண்ணுமாக எவ்வேழு ஜோடும், சுத்தமில்லாத மிருகங்களில் ஆணும் பெண்ணுமாக ஒவ்வொரு ஜோடும், ஆகாயத்துப் பறவைகளிலும், சேவலும் பேடுமாக எவ்வேழு ஜோடும் உன்னிடத்தில் சேர்த்துக்கொள்**; என நோவாவிடம் ஆண்டவர் கூறினார். எபிரெய மொழியில் பேழைக்குள் "சுத்தமான" விலங்கினங்கள் மற்றும் பறவைகள் ஏழு ஏழு இணைகளென தெளிவாக கூறப்பட்டுள்ளது. சுத்தமான படைப்பின் வகைகளில் இதில் ஏழென்று கூறப்பட்டுள்ளதா அல்லது பதினான்கென கூறப்பட்டுள்ளதா எனும் வினா எழுகிறது. KJV மொழிபெயர்ப்பில் முதலில் சுத்தமான விலங்கினங்கள் மற்றும் பறவைகளில் ஏழு என கூறப்பட்டுள்ளது போன்ற சிந்தைக் கொள்ள நேரிடும், ஆனால் அதன் பின்னர் அதில் "ஆணும் பெண்ணுமாக" என குறிப்பிடப் பட்டிருக்கும். NRSV மொழிபெயர்ப்பில் சுத்தமான விலங்கினங்கள் மற்றும் பறவைகளில் "ஏழு இணைகள்" எனக் கூறப்பட்டுள்ளது (காண்க ESV; NJPSV; REB). எனவே ஏழு இணைகள் என முன்பு காண்கின்ற கோணமே சரியானதாக இருப்பதற்கு வாய்ப்புகளதிகம், ஏனெனில் "ஏழேழு" என்பதனை பின்பற்றி "ஆணும் பெண்ணும்" என கூறப்பட்டுள்ளதால் ஒவ்வொரு வகையிலும் ஏழு இணைகள் எனும் கோணத்தையே பரிந்துரைக்கிறது. **சுத்தமற்ற விலங்கினங் களையும்** பேழையில் கொண்டுவர ஆண்டவர் நோவாவிற்கு கட்டளையிட்டார். ஒவ்வொரு கையிலும் இரண்டு அல்லது ஒரு இணை (NRSV; ESV; REB) **ஆணும் பெண்ணுமாக** ஒவ்வொரு வகையும் பாதுகாக்கப்பட வேண்டும் (காண்க 6:19) இந்த கட்டளைகளை பின்பற்றுவதன் மூலம் வெள்ள அழிவிற்கு பிறகு நோவா பல வகையான உயிரினங்களை **உயிரோடு** பாதுகாப்பார்.

மோசேயின் சட்டம்,[1] கொடுக்கப்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே சுத்தமான மற்றும் அசுத்தமான விலங்கினங்கள் மற்றும்

பறவைகளுக்கான வேறுபாடுகள் ஏற்கனெவே பிரிக்கப் பட்டுவிட்டது. பிற்கால யூத எழுத்தாளர்கள் கூறுவது போன்று, மோசேயின் சட்டம் இதனை பார்த்து பரிந்துரைக்கப்பட்டது என்பதனை உறுதிப்படுத்துகிறது எனும் கருத்திற்கு இது ஆதாரமாக இல்லை. ஆனால் ஆண்டவர் பலியிடக் கூடிய விலங்கினங்கள் (சுத்தமானவை) மற்றும் பலியிடக் கூடாத விலங்கினங்கள் (சுத்த மற்றவை) வேறுபடுத்தி அதனை வெகு காலத்திற்கு முன்னரே வலியுறுத்தியிருக்கிறார் என்பதனை எடுத்துரைக்கிறது. இதே விதிகள் மோசேயின் சட்டங்களோடு இணைக்கப்பட்டு (லேவி. 11:1-47; உபா. 14:3-20). சிலுவையில் இயேசு ஒரே தரம் பலியாக்கப்பட்டு, பலி முறைகள் அதோடு நிறைவேறின காலம் வரை செல்லதக்கதாக இருந்தது (எபி. 7:27; 9:12, 28; 10:10).

**வசனம் 4.** ஆண்டவர் பெருவெள்ளத்தை அனுப்புவேன் என முதலில் அறிவித்தப்பின்னர் எவ்வளவு காலம் தாமதித்தார் என்பதனை குறித்து வேதம் எதனையும் கூறவில்லை, எனினும் நோவாவிற்கு பேழையினை கட்டியெழுப்ப சில ஆண்டு காலம் அளிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் வசனம் 4ல் ஆண்டவர் அவசரத்தைக் காட்டுகிறார், ஏனெனில் பெருவெள்ளத்திற்கு முந்தைய தலைமுறையினருக்கு காட்டிய நீடிய பொறுமையான கிருபையின் காலம் ஏறக்குறைய முடிந்து போனது. இன்னமும் காலம் தாழ்த்தாமல் **ஏழே நாட்களில்** - அவர் **பூமியின் மீது பெருமழையை அனுப்பப் போகிறார்.** அப்பெருமழை **நாற்பது பகலும் நாற்பது இரவும்** தொடர்ந்து இருக்கும்.[2] ஊற்றப்படும் பெருமழை **பூமியின் மேல்** ஆண்டவர் **உண்டாக்கிய அனைத்து உயிரினங்களின்** மீது பேரழிவை உண்டாக்குகிறதாக இருக்கும்.

**வசனம் 5. நோவா தனக்குக் கர்த்தர் கட்டளை யிட்டபடியெல்லாம் செய்தான்** என இதன் ஆசிரியர் மறுபடியும் உரத்துக் கூறுகிறார். இது நோவா ஆண்டவர் கட்டளை யிட்டவைகளுக்கு அனைத்து நிலைகளிலும் முழு மனதாக கீழ்ப்படிந்தார் என 6:22ல் கூறப்பட்டுள்ள வசனத்தினை திரும்ப திரும்ப கூறுவதாகும். இப்படி கூறுவது, ஆசீர்வாதங்களின் போது ஆனந்தமாக இருப்பதனை காட்டிலும், பாடுகளின் காலத்தில் கீழ்ப்படிதலை கற்றுக்கொள்ளக்கூடிய நிலையிலிருந்த இஸ்ர வேலருக்கும் (பிற்காலத்தில் கிறிஸ்தவர்களும்) அவசியப்பட்டது.

**வசனங்கள் 6, 7.** ஜலப்பிரளயத்துக்குத் தப்பும்படி நோவாவும் அவனுடனேகூட **அவன் குமாரரும், அவன் மனைவியும், அவன் குமாரரின் மனைவிகளும் பேழைக்குள் பிரவேசித்தார்கள் -** ஒட்டுமொத்தம் எட்டு பேர் (1 பேதுரு 3:20; NIV). வசனம் 7:6ன் படி வெள்ளம் வந்தப்போது **நோவா அறுநூறு வயதாக இருந்தார்.** 5:32ல் கூறப்பட்டுள்ள நோவாவின் வயதைக் குறித்த தகவலின்படி, பெருவெள்ளம் தொடங்குகையில் அவரது பிள்ளைகளில் ஒருவர் நூறு

வயதை எட்டியிருக்கக்கூடும் (ஆகிய விளக்கங்களை காண்க 10:21; 11:10). அதன் பின்னர் முந்நூறு ஆண்டுகள் வாழ்ந்த போதிலும் (9:28), மேற்கொண்டு பிள்ளைகள் பெற்றதாக வசனக்குறிப்புகள் எதுவும் இல்லை.

**வசனங்கள் 8, 9.** இந்த வசனங்கள் **நோவா** தன்னோடு கூட **பேழையில் சுத்தமுள்ள** மற்றும் **சுத்தமற்ற விலங்குகளையும், பறவைகளையும் மற்றும் பூமியின் மீது ஊரும் அனைத்து விதமான உயிரினங்களையும் ஆண்டவர்** கட்டளையிட்டபடியெல்லாம் செய்தாரென கூறும் 7:2, 3ன் தகவல்களை நமக்கு கூறுகிறது. ஆண்டவருடைய கட்டளைப்படி விலங்கினங்கள் **ஆணும் பெண்ணும் இரண்டிரண்டாகச்** சென்றன.

ஆதியாகமத்தின் ஆக்கியோன் வெவ்வேறு வகையான ஆதாரங்களை கொண்டு இதனை எழுதியிருக்கிறபடியால் 7:2, 3 மற்றும் 7:8, 9 ஆகிய வசனங்களில் முரண்பாடுகள் காணப்படுவதாக விவிலிய விமர்சகர்கள் வாதிடுகின்றனர். எப்படியாயினும் இவ்விரு வசனங்களுக்கிடையயே எவ்விதமான முரண்பாடும் இல்லை. முதலாம் வசனப்பகுதி ஏழு இணை சுத்தமான விலங்கினங்களும், ஒரு இணை சுத்தமற்ற விலங்கினமும் வெள்ளப்பெருக்கிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்பதனை உறுதிப்படுத்துகிறது, இரண்டாம் பகுதி சுத்தமும் சுத்தமற்ற விலங்கினமாகிய இரண்டும் இணை இணையாக பேழைக்குள் சென்றன என்பதனை உறுதிப்படுத்துகிறது. எனவே இங்கு சுத்தமான விலங்கினங்கள் ஏழு இணை என 7:8, 9ல் மீண்டும் எழுத வேண்டிய அவசியம் இதன் ஆக்கியோனுக்கு அவசியம் இல்லை.

**வசனம் 10.** ஆண்டவர் ஏற்கனெவே கூறினதுப் போன்று, **ஏழு நாட்கள்** கழித்து **பெருவெள்ளம்** தொடங்கியது. நோவாவும் அவரது இல்லத்தாரும் இந்த இறுதி வாரத்தை எப்படி கழித்தனர் என்பதனை குறித்து பல ஊகங்கள் எழுகிறது. சிலர் நோவா தனது சமுதாயத்தில் வாழ்ந்த மனந்திரும்பாத மக்களுக்கு தொடர்ந்து பிரசங்கித்தாரென கூறுகின்றனர். ஒருவேளை அவர்கள் இழந்து போகப் போகிற அவர்களது வழிமரபினரை நினைத்து மன்றாட்டிலும் அமைதி யாகவும் கழித்திருக்க வேண்டும். மேலும் தற்போதைய மேம்படுத்தப்பட்ட கருத்துப்படி அவர்கள் நீண்ட கால தங்குதலுக்கு ஆயத்தங்கள் மேற்கொண்டு பேழையிலுள்ள தங்களது அறையில் வாழ்ந்திருக்க வேண்டும். முதற் கூறிய இரண்டு கருத்துகளும் நடந்திருக்க வாய்ப்புகளதிகம், ஏனெனில் மழை பெய்த அன்றைய தினத்தில் தான் நோவாவும் அவரது இல்லத்தினரும் பேழைக்குள் சென்றனர்[3] என 12 மற்றும் 13 ஆகிய வசனங்கள் கூறுகின்றன. பெருவெள்ளத்திற்கு ஏழு நாட்களுக்கு முன்னர் அவர்கள் செய்தது என்ன என்பதனை குறித்து சரியான தகவல்கள் நமக்கு கொடுக்கப்படவில்லை. 13ஆம் வசனத்தில் கூறப்பட்டுள்ள பேழைக்குள் “நுழைந்தனர்” என்பதற்கு (בָּא, *ba’*, பா)

எனும் எபிரெய பதம், பெருமழை தொடங்கின அன்றைய நாளில் அவரது இல்லத்தினர் அனைவரும் பேழைக்குள் சென்றடைந்தனர் என்பதனை குறிப்பிடுகிறது. அவர்கள் விலங்கினங்கள், பறவைகள், மற்றும் ஊறும் உயிர்வாழ் இனங்கள் ஆகியவற்றை தங்கள் அறைகளில் கொண்டு வந்தும் பேழையில் ஒரு ஆண்டு உயிர் வாழ்வதற்கான பொருட்களை கொண்டு சேர்ப்பதிலும் ஈடுபட்டிருப்பதற்கு வாய்ப்புகள் அதிகம்.

## வெள்ளத்தின் துவக்கம் (7:11-16)

**[11]நோவாவுக்கு அறுநூறாம் வயதாகும் வருஷம் இரண்டாம் மாதம் பதினேழாம் தேதியாகிய அந்நாளிலே, மகா ஆழத்தின் ஊற்றுக்கண்களெல்லாம் பிளந்தன; வானத்தின் மதகுகளும் திறவுண்டன. [12]நாற்பதுநாள் இரவும் பகலும் பூமியின்மேல் பெருமழை பெய்தது. [13]அன்றைத்தினமே நோவாவும், நோவாவின் குமாரராகிய சேமும் காமும் யாப்பேத்தும், அவர்களுடனேகூட நோவாவின் மனைவியும், அவன் குமாரரின் மூன்று மனைவிகளும், பேழைக்குள் பிரவேசித்தார்கள். [14]அவர்களோடு ஜாதிஜாதியான சகலவிதக் காட்டு மிருகங்களும், ஜாதிஜாதியான சகலவித நாட்டு மிருகங்களும், பூமியின்மேல் ஊருகிற ஜாதிஜாதியான சகலவித ஊரும் பிராணிகளும், ஜாதிஜாதியான சகலவிதப் பறவைகளும், பலவிதமான சிறகுகளுள்ள சகலவிதப் பட்சிகளும் பிரவேசித்தன. [15]இப்படியே ஜீவசுவாசமுள்ள மாம்ச ஜந்துக்களெல்லாம் ஜோடுஜோடாக நோவாவிடத்தில் பேழைக்குள் பிரவேசித்தன. [16]தேவன் அவனுக்குக் கட்டளையிட்டபடியே, ஆணும் பெண்ணுமாக சகலவித மாம்சஜந்துக்களும் உள்ளே பிரவேசித்தன; அப்பொழுது கர்த்தர் அவனை உள்ளே விட்டுக் கதவை அடைத்தார்.**

**வசனம் 11.** பெருவெள்ளத்தின் நிகழ்வுகள் துல்லியமாக பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. நோவாவுக்கு **அறுநூறாம் வயதாகும் வருஷம் இரண்டாம் மாதம் பதினேழாம் தேதியாகிய அந்நாளிலே பெருவெள்ளம் ஆரம்பமானது**. அக்காலத்தில் நிகழ்ந்த பெருவெள்ளத்தினை மிகச்சரியான காலக்குறிப்போடு குறிப்பிடுவது இதன் வரலாற்று தன்மையினைக் குறித்து ஆய்வை ஏற்படுத்துகிறது. மாறாக அக்காலத்தில் இருந்த மெசெ பொத்தோமியா கட்டுக்கதைகளில் பெருவெள்ளத்தைக் குறித்ததான வரலாற்று கட்டமைப்புகள் எதுவும் கிடையாது. இப்படி துல்லியமான தகவல் கொடுக்கப்பட்டுள்ள போதிலும் “இரண்டாம் மாதம்” என்பது உறுதியற்றதாகவே காணப்படுகிறது, ஏனெனில் யூத மக்களின் வரலாற்றில் அவர்கள் இரண்டு நாட்காட்டிகளை பயன்படுத்தி வந்தனர். அவர்களுடைய சமூக (அல்லது வேளாண்மை) நாட்காட்டி, பருவக் காலத்தில் தொடங்குகிறது

(காண்க யாத். 23:16; 34:22); அவர்களுடைய சமயம் சார்ந்த ஆண்டின் நாட்காட்டியில் முதல் மாதம் இளவேனில் காலமாகும் (யாத். 12:2, 18; உபா. 16:1, 6).[4] ஆதியாகமம் 8:22ல் கூறப்பட்டுள்ள விதைப்பின் காலத்தை குறித்த குறிப்பேடு, பேழையை விட்டு வந்த பின்னர் “நோவா பயிரிடுகிறவனாகி திராட்சத்தோட்டத்தை நாட்டினான்” (9:20) எனும் உண்மையோடு ஒப்பிட்டு பார்த்தால், அவரும் அவரது இல்லத்தினரும் இலையுதிர் காலத்தில் பேழைக்குள் சென்று, அதிலிருந்து வெளியே ஒராண்டு பத்து நாட்கள் கழித்து வெளியே வந்தனர் எனும் உணர்வு ஏற்படுகிறது (8:14-19).[5]

“அந்த மாதத்தின் பதினேழாம் நாளில்” பூமியின் மேலும் கீழுமான தண்ணீரை மறுபடியும் ஒன்று சேர்த்து, தலைகீழான அசல் படைப்பின் உருவாக்குதல் தொடங்கியது (காண்க 1:7). உலகின் படைப்புகள் அழிக்கப்பட்டதில் **மகா ஆழத்தின் ஊற்றுக்கண்கள் எல்லாம் பிளந்தன**; வானத்தின் மதகுகளும் திறவுண்டன. ஐயத்திற்கு இடமில்லாமல் இந்த செயல்முறையில் பூமிக்கடியில் இருந்த தண்ணீர் (பூமிக்கடியில் இருக்கும் ஆறுகள் ஊற்றுகள்) மற்றும் பூமிக்கடியில் வெப்ப நிலையிலுள்ள தண்ணீர் பூமியின் மேல் வந்தது.

மேலும் கூடுதலாக, **வானத்தின் மதகுகளும் திறவுண்டன**. “மதகுகள்” (אֲרֻבָּה, *’ᵃrubbah*, ருப்பா) எனும் பதம் எபிரெய பதத்திலிருந்து வந்ததாகும். இலக்கிய ரீதியாக இதன் பொருள் “சாளரம்” என பொருளாகும். சிலர் செய்வது போன்று இதனை இலக்கிய ரீதியான பொருள் கொள்ளுதல் கூடாது.[6] இது அந்த பழைய உலகத்தை அழிக்கும்படியாக “வானத்தின் மதகுகள்” (சாளரம்)[7] வழியாய் வந்த கொடூரமான பெருமழையை உருவகப் படுத்தி கூறப்பட்டதாகும். அதன் பின்னர் இதே உருவக மொழியை பயன்படுத்தி வானத்தின் பலகணிகளை திறந்து ஆசீர்வதிப்பவர் ஆண்டவரொருவரே என விவிலிய தொகுப்புகள் கூறுகிறதனை கவனிக்கவும் (2 இராஜா. 7:2, 19; மல். 3:10).

**வசனம் 12. நாற்பதுநாள் இரவும் பகலும் பூமியின்மேல் பெருமழை பெய்தது**. இந்த வசனம் 7:4ல் கூறப்பட்டுள்ள ஆண்டவரின் வாக்குத்தத்தம் நிறைவேறினதைக் குறிப்பிடுகிறது. ஒரு மாதத்திற்கும் மேலாக பெய்த மழையின் காலம் என்பது ரிக்டர் அளவில் பெரும் புள்ளிகள் பதிவானதை காட்டுகிறது.

**வசனம் 13.** முன்னர் **நோவா** மற்றும் பிள்ளைகள் **சேம்**, **காம்**, **யாப்பேத்**, மற்றும் அவரது பிள்ளைகள் என கூறப்படுவது முற்பிதாக்களின் தொகுப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. நோவாவும் அவரது பிள்ளைகளும், நோவாவின் மனைவியும், மற்றும் பிள்ளைகளுமென்றே முன்னர் எப்போதும் கூறப்பட்டு வந்தனர் (6:18; 7:7, 13; 8:18). நோவாவுடைய மனைவியின் பெயர் அல்லது அவர்தம் பிள்ளைகளுடைய மனைவிகளின் பெயர்கள் உட்பட வரலாற்றில் எந்த பெண்களின் பெயர்களும் குறிப்பிடப்படவில்லை. யோபுவின்

மனைவியைப் போலவே (யோபு 2:9, 10) நோவாவின் மனைவியும் அவர்களின் கணவரின் உறவோடு மட்டுமே அறியப்பட்டிருக்கிறார்கள்.

பெருவெள்ளத்திற்கு முந்தைய சம்பவங்களில் ஈடுபட்ட பெண்மணிகளை குறித்து நாம் குறைவாக அறிந்து கொண்டாலும், லாமேக்கில் தொடங்கி (4:19) வெள்ளப்பெருக்கின் காலத்திற்கு முன்னர் வரையுள்ள காலம் வரை (6:5). நிகழ்ந்த ஒழுக்கக்கேட்டில் பெண்களின் பங்கு ஒன்றுமில்லை என்பது நமக்கு போதுமான அளவிற்கு தெரியவருகிறது. இந்த நான்கு பேரும் ஒவ்வொரு மனைவியை மட்டுமே திருமணம் செய்தவர்களாவார்கள். நோவாவின் இல்லம் எட்டு பேரைக் கொண்டதாக இருந்தது (1 பேதுரு 3:20), ஆபிரகாமின் சம்பவம் வரை ஆண்டவரின் சந்ததியாகிய சேத்தின் வழிமரபில் ஒரு மனைவிக்கு மேல் திருமணம் புரிந்தவர்களைப் பற்றின தகவலேதும் கூறப்படவில்லை.

**வசனங்கள் 14, 15.** ஆதியாகமம் 7:6-10ல் கூறப்பட்டுள்ளதனை இதன் ஆக்கியோன் மீண்டும் விவரமாக எடுத்துரைக்கிறார்: நோவா மற்றும் அவரது இல்லத்தார், பெரும் வகையான **விலங்கினங்கள்**, **மந்தைகள்**, **ஊர்வனவைகள்**, மற்றும் **பறவைகள்** ஆகியவை பேழைக்குள் சென்றது கூறப்பட்டுள்ளது. அவர்கள் **பேழைக்குள்** சென்றனர் எனும் சொற்றொடர் வசனம் 7:9 னை மட்டுமன்றி 6:19, 20ஐ யும் பின் நோக்க செய்கிறது. இந்த விலங்கினங்களுக்காக நோவா அலைந்து திரிய வேண்டிய அவசியம் இல்லாமல் போனது, ஏனெனில் ஆண்டவர் அவைகளை அவரிடம் கொண்டு வந்து விட்டு விட்டார். இந்த காட்சியானது தோட்டத்தில் ஆதாமிடம் விலங்குகளுக்கு பெயரிடும்படி கொண்டு வந்து நிறுத்தினதை நினைவூட்டுகிறது (2:19). இந்த நிகழ்வில், அவைகள் நோவாவிடம் இணை இணையாக வந்தன (NKJVயில் இரண்டு இரண்டாக) இப்படியே **ஜீவசுவாசமுள்ள மாம்ச ஜந்துக்களெல்லாம் ஜோடுஜோடாக** நோவாவிடத்தில் பேழைக்குள் பிரவேசித்தன. இந்த மொழி நடையானது ஜீவசுவாசமுள்ள மாம்ச ஜந்துக்கள் 6:17 ஆம் வசனத்தினை மீண்டும் கூறுவதின் வடிவமாகும், ஆனால் இதில் அதற்கு மாறாக பேழையில் பாதுகாக்கப்படப்போகிற படைப்புகளைக் குறித்து கூறப்பட்டுள்ளது.

**வசனம் 16.** வசனத்தில் பல தகவல்கள் இணைக்கப் பெற காரணம் என்னவெனில், ஒருவேளை பேழையில் செல்ல தயங்காமலும், **ஆண்டவர் அதனை அடைத்துப் போடுகையில்** பின்வாங்காமலும் இருந்த எட்டு நம்பின ஆத்துமாக்களுக்கு வேண்டிய தீர்க்கமான விசுவாசத்தினை வலியுறுத்தும் நோக்கமாக இருக்கலாம். இந்த பேழையானது வெளியே பொங்கியெழும் கொந்தளிப்பிலிருந்து இவர்களை தாங்கி விடுவிக்குமா, அல்லது ஆண்டவர் அதனை அடைத்துப் போட்டப்படியினால், அவர்கள் தப்பிக்க கூடாமல் கல்லறையாக மாறுமா? ஆண்டவருடைய வாக்குத்தத்தத்தை தவிர மனித கோணத்தில் வெற்றிப் பெறுவதற்கு எந்த உறுதியும் இவர்களுக்கு

கிடையாது. ஏனெனில் இது கடற்பயணத்தினை இதுவரை மேற்கொள்ளாதவர்களின் ஆராயப்படாத தண்ணீராகும், பேழையில் சென்ற நோவாவும் அவரது இல்லத்தினரும் கதவு அடைப்பட்டதனை கேள்விப்படுகையில் ஆண்டவருடைய கரத்தில் தங்களை முழுவதும் ஒப்படைக்க ஒரு மாபெரும் விசுவாசம் தேவைப்பட்டது (எபி. 11:7).

## தண்ணீர்களின் எழுச்சியும் மலைகளும் (7:17-24)

**[17]ஜலப்பிரளயம் நாற்பது நாள் பூமியின்மேல் உண்டானபோது,
ஜலம் பெருகி, பேழையைக் கிளம்பப்பண்ணிற்று; அது பூமிக்குமேல்
மிதந்தது. [18]ஜலம் பெருவெள்ளமாகி, பூமியின்மேல் மிகவும் பெருகிற்று;
பேழையானது ஜலத்தின்மேல் மிதந்துகொண்டிருந்தது. [19]ஜலம்
பூமியின்மேல் மிகவும் அதிகமாய்ப் பெருகினதினால், வானத்தின்கீழ்
எங்குமுள்ள உயர்ந்த மலைகளெல்லாம் மூடப்பட்டன. [20]மூடப்பட்ட
மலைகளுக்கு மேலாய்ப் பதினைந்து முழ உயரத்திற்கு ஜலம் பெருகிற்று.
[21]அப்பொழுது மாம்ச ஜந்துக்களாகிய பறவைகளும், நாட்டு
மிருகங்களும், காட்டு மிருகங்களும், பூமியின்மேல் ஊரும் பிராணிகள்
யாவும், எல்லா நரஜீவன்களும், பூமியின்மேல் சஞ்சரிக்கிறவைகள்
யாவும் மாண்டன. [22]வெட்டாந்தரையில் உண்டான எல்லாவற்றிலும்
நாசியிலே ஜீவசுவாசமுள்ளவைகள் எல்லாம் மாண்டுபோயின.
[23]மனுஷர் முதல், மிருகங்கள், ஊரும் பிராணிகள், ஆகாயத்துப்
பறவைகள் பரியந்தமும், பூமியின்மேல் இருந்த உயிருள்ள வஸ்துக்கள்
யாவும் அழிந்து, அவைகள் பூமியில் இராதபடிக்கு நிக்கிரகமாயின;
நோவாவும் அவனோடே பேழையிலிருந்த உயிர்களும் மாத்திரம்
காக்கப்பட்டன. [24]ஜலம் பூமியின்மேல் நூற்றைம்பது நாள் மிகவும்
பிரவாகித்துக்கொண்டிருந்தது.**

**வசனம் 17. ஜலப்பிரளயம் நாற்பது நாட்கள் பூமியின்மேல் உண்டானபோது**, எனும் சொற்றொடர் 7:12ல் கூறப்பட்டுள்ள நாற்பது பகல் மற்றும் நாற்பது இரவுகள் மழை பெய்தது எனும் வசனத்தை ஒன்றிணைக்கிறது. மிகுதியான மழை தண்ணீரை **பெருக்கி, பேழையைக் கிளம்பப்பண்ணிற்று; அது பூமிக்குமேல் மிதந்தது**. பெருமழை நின்ற பிறகும், பூமிக்கடியிலிருக்கும் ஆதாரங்களிலிருந்தும், பனிப்பாறைகள் உருகினதிலிருந்தும் தண்ணீரின் பெருக்கம் தொடர்ந்தது.

**வசனங்கள் 18-20.** மேலும் வசனமானது கூறுகையில், மூன்று தனித்துவமான வழிகளில் தண்ணீர் **பெருவெள்ளமானது**. (1) **பேழையானது ஜலத்தின்மேல் மிதந்துகொண்டிருந்தது**, இந்த அளவிற்கு தண்ணீர் பெருக்கெடுத்தது (7:18). (2) அது மிகவும் பெருகினதன் பலனாக **வானத்தின்கீழ் எங்குமுள்ள உயர்ந்த மலைகளெல்லாம் மூடப்பட்டன** (7:19). (3) **பதினைந்து முழ உயரத்திற்கு**

**ஜலம் பெருகி மலைகளுக்கு** மேலாய் உயர்ந்தது (7:20).

7:18-20 வரை “பெருகியது” என மொழியாக்கம் செய்யப்பட்டுள்ள பதம் גָּבַר (*gabar*, கபர்) “பலத்த”[8] என பொருள் தரும் எபிரெய பதமாகும். இது சாதனைகள் பல புரிந்த தாவீதின் “பராக்கிரமசாலிகளை” (2 சாமு. 23:8-39; 1 நாளா. 11:26-47) போன்று வாழ்வா சாவா என எதிரிகளை எதிர்த்து போரிட்ட வலிமைமிக்க போர் வீரர்களை குறிப்பிடுகிறது. எபிரெய சிந்தனையின்படி யாவே “ராஜாக்களுக்கு ஆண்டவர்” (தானி. 2:47), செங்கடலில் பார்வோனின் இராணுவத்தை தூக்கி எறிந்த போர் புரியும் அரசர் (யாத். 15:1-18). இஸ்ரவேல் எனும் மீட்படைந்த மக்களை உருவாக்கி, ஆண்டவர் இப்படியாக தமது “வல்லமையை” விளங்கப்பண்ணினார் (சங். 106:8; 145:4, 11, 12). கம்பீரம் பொருந்திய படைப்புகள் மற்றும் உலகை கட்டுப்படுத்துவது, உலகம் மற்றும் அதனை சுதந்தரித்துக் கொண்டுள்ள அனைத்து விதமான உயிர்கள் (சங். 65:5-13; 89:9-13). ஆகியவை அவரது மாபெரும் வல்லமையை விளங்கப் பண்ணுகிறது.

முதல் படைப்பில் பூமியின் மேல் வெட்டாந்தரை உண்டாகவும் மற்றும் அதன் மேல் உயிர் இனங்கள் வாழ தொடங்கவும், தண்ணீரை பிரித்து “ஆழங்களை” மூடி, கொஞ்சம் தண்ணீரை விரிவு அல்லது ஆகாயத்திற்கு மேலாக ஆண்டவர் வைத்தாரென ஆதியாகமம் வெளிப்படுத்துகிறது (1:2-9). பெருவெள்ளம் நிகழுகையில் போர் புரியும் பலம் பொருந்திய வீரர்கள் போன்று மேலிருந்த தண்ணீர்கள் தங்கள் சிறையிருப்பை முறித்துக் கொண்டு பூமியின் மீதுள்ள அனைத்து உயிரினங்களையும் அழிக்க கீழிருக்கும் தண்ணீரோடு ஒன்று சேர்ந்தது. பேழையில் ஆண்டவருடைய அடைக்கலத்தில் இருந்தவர்களை தவிர்த்து, அனைத்து மனிதர், விலங்குகள், பறவைகள் மற்றும் ஊர் வனவைகள் மீது மரணம் என ஆண்டவருடைய வல்லமை மிக்க செயல் படைப்பை தலைகீழாக மாற்றியது.

**வசனங்கள் 21-24.** இத்தொகுப்பில் பெருவெள்ளத்தை குறிக்கும் சொல்லியலைக் காண்கையில் பெருவெள்ளமானது அனைத்து லகத்தின் மீதும் வந்ததென்பதனை தெளிவுபடுத்துகிறது: “வானத்தின் கீழ் எங்குமுள்ள உயர்ந்த மலைகளெல்லாம் மூடப்பட்டன” (7:19) மேலும் **அப்பொழுது மாம்ச ஜந்துக்களாகிய பறவைகளும், நாட்டு மிருகங்களும், காட்டு மிருகங்களும், பூமியின்மேல் ஊரும் பிராணிகள் யாவும், எல்லா நரஜீவன்களும், பூமியின்மேல் சஞ்சரிக்கிறவைகள் யாவும் மாண்டன** (7:21). இது **வெட்டாந்தரையில் உண்டான எல்லாவற்றிலும் நாசியிலே ஜீவசுவாசமுள்ளவைகளை** (7:22) உள்ளடக்கியுள்ளது. பெரு வெள்ளமானது **பூமியின் மேல் இருந்த உயிருள்ள வஸ்துக்கள் யாவையும் அழித்துப்** போட்டது. வசனம் **நோவாவும் அவனோடே பேழையிலிருந்த உயிர்களும் மாத்திரம் காக்கப்பட்டதை** (7:23) உறுதிப்படுத்துகிறது. **ஜலம் பூமியின்மேல் நூற்றைம்பது நாள் மிகவும்**

**பிரவாகித்துக் கொண்டிருந்தது** (7:24) என கூறி இவ்வதிகாரம் நிறைவுபெறுகிறது.

இவ்வசனங்களை நேரடியாக வாசிப்பதனால் உலகளாவிய பெருவெள்ளம் எல்லா மலைகளையும் மூடியது மற்றும் பேழையிலிருந்தவர்களைத் தவிர்த்து அனைத்து உயிரினங்களையும் அழித்துப்போட்டது எனும் முடிவில் நிறைவுபெறுகிறது, அப்படியிருந்தும் இது மெசப்பொத்தோமியா பகுதியின் அளவில் மட்டும் நிகழ்ந்த பெருவெள்ளமென பலர் வாதிடுவதுண்டு. புவியியலும் தொல்பொருள் சான்றுகளும் உலகளாவிய பேரழிவை ஆதரிப்பதில்லை என கூறுகின்றனர். உலகின் படைப்பு, விலங்கினங்கள் மற்றும் மனிதனின் படைப்பு ஆகியவற்றை மறுக்கும் அறிவியல் உலகினருக்குள்ளும் இதனைப் போன்றதொரு வாதமே நடைந்தேறுகிறது. அறிவியல் பூர்வமாக இப்பெருவெள்ளம் நிகழ்ந்ததா அல்லது நிகழவில்லையா என்பது இந்த விளக்கவுரையின் நோக்கத்திற்கு அப்பாற்பட்டது, ஆனால் பண்டைய கடந்த காலத்தினை உண்மையென உறுதி செய்யும் மற்றும் பொய்யாக்கும் அறிவியலின் தகுதி வரையறுக்கப்பட்ட அளவிலானது என்பதனை நினைவில் கொள்ள வேண்டும்.[9]

இங்கு வசனத்தை மட்டுமே பேச அனுமதிக்க வேண்டும். முக்கிய விவிலிய வாதமாக முன் வைக்கப்படும் உலகளாவிய பெருவெள்ளத்தினை ஆதரிப்போருக்கும் அதனை எதிர்ப் போருக்கும் ஒரு வேளை அது உதவியாக இருக்கும்.[10] உலகளாவிய பெருவெள்ளமல்ல என கூறப்படும் பிந்தைய கூற்றினை சான்றுபடுத்த முழு உலகையும் குறிப்பிடும் (תֵּבֵל, *thebel*, தெபெல்; காண்க யோபு 34:13) எபிரெய பதம் இத்தொகுப்பில் காணப்படவில்லை. இப்பகுதி (אֶרֶץ, *'erets*, எரட்ஸ்) எரட்ஸ் எனும் பதத்தினையே கொண்டுள்ளது, இப்பதமே பூமியெனும் சொல்லை மொழிபெயர்க்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. கானான் “தேசம்” (12:1-10 வரையுள்ள வசனங்களில் எட்டு முறை) மற்ற ஊர்மயமாக்கப்பட்ட பகுதிகள் (2:11-13; 4:16; 10:10; 11:2), மேலும் 1:1, 2 மற்றும் 2:4 ஆகிய வசனங்களில் இப்பதம் முழு உலகையும் குறிப்பிட பயன்பட்டிருக்கிறது. படைப்பின் தொகுப்பில் இப்பதம் காணப்படுவதால், பெருவெள்ளத்தை கொண்டு ஆண்டவருடைய படைப்பை தலைகீழாக்கும் இத்தொகுப்பிலும் அதே வழியில் தர்க்கரீதியாக மொழிபெயர்க்கப்பட வேண்டும்.

பெருவெள்ளத் தொகுப்பில் (7:19-23) எட்டு முறை பயன்படுத்தப்பட்டுள்ள “அனைத்தும்” “எல்லாம்” “எங்கிலும்” ஆகிய சொற்களை மொழியாக்கம் செய்யப்பட்டுள்ள כֹּל (*kol*, கோள்) எனும் எபிரெய பதத்தின் பயன்பாட்டை கொண்டு மேலும் ஒரு வாதம் செய்யப்படுகிறது. அது என்னவெனில் சில சமயங்களில் இதன் ஆக்கியோனால் ஒரு குறிப்பட்ட இடத்தின் நோக்கத்தோடு

எழுதப்பட்டிருப்பது உலகளாவிய கருத்தினை கொள்வதில்லை (41:57; உபா. 2:25) என்பதாகும். (πᾶς, *pas*, பாஸ் "எல்லா" அல்லது "ஒவ்வொரு") எனும் கிரேக்க பதத்தை புதிய ஏற்பாடும் இதே வழியில் பயன்படுத்துகிறது (அப். 2:15; கொலோ. 1:23). எப்படியாயினும் இப்படி நியாயப்படுத்துதல் நம்பச் செய்யமுடியாதபடி இருக்கிறது. 1:21, 26ல் கூறப்பட்டுள்ள படைப்பின் சித்தாந்தம் வலியுறுத்தும் முழ கோள் எனும் உலகளாவிய சித்தாந்தம், படைப்பை அழிக்கும் தொகுப்பிலும் (7:19-23) அதே உலகளாவிய எனும் பொருளை பெற்றிருக்கிறது போன்று தெரிகிறது. எனவே வேத வசன நிலைப்படி, கண்டிப்பாக உலகளாவிய பெருவெள்ளம் எனும் கோணமே சரியானது போல தெரிகிறது.

## நடைமுறைப்படுத்துதல்

### மனமாற்றத்திற்கு இடங்கொடுக்கும்படி ஆண்டவர் தாமதித்தல் (அதிகாரம் 7)

ஆண்டவர் பெருவெள்ளத்தைக் குறித்து முதன் முதலில் நோவாவை எச்சரித்த காலந்தொடங்கி, பெருமழை தொடங்கின பின்னர் அவரது இல்லத்தினரை பேழையில் விட்டு கதவை தாழிட்ட நொடி வரை எத்தனைக் காலம் சென்றது என்பதனை குறித்து நாம் ஒன்றும் அறியோம். எனினும் நிச்சயமாக இந்த இரண்டு நிகழ்விற்கு இடையே பல பத்தாண்டுகள் கழிந்திருக்கக்கூடும். கால அளவு எவ்வளவாக இருப்பினும், இந்த மீந்திருக்கும் விசுவாச மக்களுக்கு, வரப்போகிற நியாயத்தீர்ப்பை குறித்து மற்றவர்களை எச்சரிப்பது, பேழையை கட்டியெழுப்புவது, மேலும் ஒர் ஆண்டு தண்ணீரின் மேல் மிதந்து உயிர் வாழ தேவையான பொருட்களை சேகரிப்பது போன்ற செயல்கள் காலம் மிக நீண்டிருப்பது போன்றும், வருத்தம் நிறைந்ததாகவும் இருந்திருக்க வேண்டும்.

ஆண்டவருடைய தண்டனை தாமதிப்பது அவருடைய ஊழியர்களுக்கு எப்போதும் பெரும் பிரச்சனையானதாகவே இருக்கிறது. "வடக்கிலிருந்து" ஆண்டவருடைய நியாயத்தீர்ப்பு வரப் போகிறது என எரேமியா பிரசங்கித்தார், மன்றாடினார், யூதாவின் மக்களை 40 ஆண்டுகாலம் எச்சரித்தார் (பாபிலோனிலிருந்து; எரே. 1:13; 4:6; 6:22; 10:22; 13:20; 25:9). பாவத்திற்கான ஆண்டவருடைய தண்டனை தாவீதின் வழி வந்த அரசர்களுக்கு எதிராக அவர்களுடைய நாட்டை அழித்து அவர்களின் மக்களை சிறைப்பிடிப்பதன் வழியாக வரப்போகிறது. என கூறி மக்கள் இவரை பரிகசிக்கும் வரை இந்த தீர்க்கதரிசியானவர் "பொல்லாப்பு … அனைத்துப் பக்கத்திலிருந்தும்" வரப் போகிறது என மீண்டும் மீண்டுமாக அறிவித்தார் (ஏரே. 6:25; 46:5); "இதோ பழைய பொல்லாப்பு வருகிறது" (காண்க ஏரே. 20:10).

இப்படி தாமதிக்கும் நியாயத்தீர்ப்பென்பது மறுக்கப்படும் நியாயத்தீர்ப்பாக இருக்கிறது; மக்கள் அவர்கள் எதனை காண்கிறார்களோ அதன் மேல் தான் தங்கள் விசுவாசத்தை வைப்பார்கள். நோவா காலத்தில் நடந்தது போன்றே கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் காலத்திலும் நடக்குமென புதிய ஏற்பாடு கூறுகிறது (மத். 24:37-39). பரிகாசம் செய்பவர்கள் “கிறிஸ்துவின் வருகை எங்கே?” என கேட்பார்கள். உலகில் இதுவரை எவ்வித தடங்கலுமற்ற சூழல் நிலவுவதால் (2 பேதுரு 3:3, 4), காலங்களின் இறுதியில் வரும் நியாயத்தீர்ப்பை குறித்து இவர்கள் பரிகசிப்பார்கள். இவர்களைக் குறித்து பேதுரு கூறுகையில் இப்படிப்பட்ட பரியாசக்காரர்கள் நோவாவின் காலத்தில் நிகழ்ந்த பெருவெள்ளத்தினை மறந்து போய் விட்டனரென கூறுகிறார் (2 பேதுரு 3:5-7). மேலும் அவர் ஆண்டவருடைய நீடிய பொறுமையின் காரணமாகவே நியாயத்தீர்ப்பு காலதாமதம் ஆகிறதெனவும்: “ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்பதனை” விரும்பியே காலதாமதம் பண்ணுகிறாரென்றும் வலியுறுத்துகிறார் (2 பேதுரு 3:9). இந்த முறையே பெருவெள்ள காலத்தின் போதும் கடைப்பிடிக்கப்பட்டது. “பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, … அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப் பேர் மாத்திரம் காக்கப்பட்டார்கள்” (1 பேதுரு 3:20). ஆண்டவருடைய நியாயத்தீர்ப்பு கிருபையோடு தாமதிப்பதனால், உலகின் பெரும்பான்மையான மக்கள் ஆவிக் குரிய வாழ்வில் சோம்பலாகி மந்த நிலைக்குள்ளானர்கள். அவர்கள் நோவாவின் பிரசங்கத்திற்கு செவிமடுக்க தவறினபடியால் (2 பேதுரு 2:5), பூமியிலிருந்து பேரழிவின் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டனர்.

## வாழ்விற்கான ஆண்டவரின் அழைப்பு (அதிகாரம் 7)

நோவாவும் அவரது இல்லதினரையும் பேழைக்குள் செல்ல அழைத்ததன் மூலம் ஆண்டவர் தமது மீட்பிற்கான செயலின் முயற்சியை முன்னெடுத்தார் (7:1, 13). அழிவு வரப் போகிறது ஆனால் ஆண்டவர் அவர்களை விடுவிக்க ஒரு வழியை ஆயத்தம் பண்ணுவாரென்று சுவிசேஷத்தை (நற்செய்தியை) இந்த இல்லத்தினர் ஏற்றுக் கொண்டனர். ஆண்டவர் உலகின் மீது அனுப்பப்போகும் பேரழிவிலிருந்து மீந்திருக்கும் தமது மக்களை மீட்பதற்கு வாக்குப்பண்ணியிருக்கிறார் என இந்த நற்செய்தியானது பொருள்படுத்துகிறது. ஆபத்து என்ற ஒன்று இல்லாவிடில் மரணத்திலிருந்து (நியாயத் தீர்ப்பிலிருந்து) சட்டப்பூர்வமான விடுதலை எனும் மீட்பு இல்லாதிருந்திருக்கும்: ஒவ்வொரு மனிதனும் மீட்பை ஏற்றுக் கொள்வதற்கும் ஏற்றுக் கொள்ளாமல் மறுப்பதற்கும் உரிமையினைப் பெற்றிருந்தனர்.

இங்க அளிக்கப்பட்ட வாழ்விற்கான ஆண்டவருடைய அழைப்பு பிற்காலத்தில் மோசேயின் மூலம் கொடுக்கப்பட்ட அழைப்பிற்கும் (உபா. 30:19, 20), தீர்க்கதரிசிகளின் மூலம் கொடுக்கப்பட்ட அழைப்பிற்கும் (ஏசாயா 52:1-12; 55:1-13; 60:1-14; எரே. 3:14-4:4; 6:16; 18:1-12; 31:21-34; மற்றும் பல அழைப்புகளுக்கும்), விசேஷமாக கிறிஸ்துவின் வழியாக வந்த அழைப்பிற்கும் முன்னோடியாக இருக்கிறது. விசுவாசத்தில் செயல்பட்டு கீழ்ப்படிய இயேசு மக்களை அழைத்தார்: (1) அவரில் இளைப்பாறுதல் கண்டடையவும் (மத். 11:28-30); (2) பிற்காலத்தில் அவர் அனுப்பப்போகும் பரிசுத்த ஆவியானவரால் “ஜீவ தண்ணீரை” (நித்திய வாழ்வை) பருகவும் (யோவான் 4:10-15; 7:37-39); (3) அவர்கள் அவருக்கு தங்கள் இருதயத்தை திறந்து கொடுத்தால் அவரோடு பந்தியில் ஐக்கியம் கொள்வதற்கும் (வெளி. 3:20); (4) “தேவனுடைய அரியாசனத்திலிருந்து” புறப்படும் “ஜீவ தண்ணீரை” பருகும் படியாகவும் (வெளி. 22:1). “ஆவியும் மணவாட்டியும்” (மீட்கப்பட்டவர்கள்) வா என இந்த அழைப்பை அனைவரும் ஏற்க சைகை காட்டி அழைக்கிறார்கள் (வெளி. 22:17).

இயேசுவின் அழைப்பை ஏற்றுக் கொள்பவர்களுக்கும், நோவா மற்றும் அவரது இல்லத்தாரின் மீட்பிற்கும் இடையே ஒரு ஒப்புமையினை பேதுரு கண்டார். மீட்படைய விரும்புகிறவர்கள் அவருடைய உயிர்த்தெழுதலை கண்டிப்பாக விசுவாசித்து ஏற்றுக் கொண்டு கிறிஸ்துவிற்குள் ஞானஸ்நானத்திற்கு கீழ்ப்படிய வேண்டும் (1 பேதுரு 3:20, 21; காண்க ரோமர் 6:3-5). நமக்காக அவர் மரித்ததின் மூலம் நம்மை பாதுகாப்பாக சுமந்து செல்லும் நமது ஆவிக்குரிய பேழையாக அவர் செயல்படுகிறார். பூமியை கெடுத்துப்போட்ட அனைத்துப் பொல்லாப்புகளிலிருந்தும் சுத்திகரிக்கப்பட்ட உலகத்திற்கு, வெள்ளப்பெருக்கிற்கு பின்னர்; வந்த அந்த எட்டு ஆத்துமாக்களைப் போன்று, மீட்கப்பட்டவர்கள் புதிய படைப்பின் அங்கமாக இருக்கின்றனர் (2 கொரி. 5:17).

பேழையிற்குள் செல்ல வேண்டுமெனும் கட்டளை ஏற்றுக் கொள்வதற்கு மிகவும் கடினமானதாகும். இவ்விதமான ஒரு பெருமழை உண்மையில் நிகழும் என்பதற்கு இதற்கு முன் எந்த காணக்கூடிய ஆதாரமும் இல்லை. ஒருவேளை அப்படி நடந்திருந்தாலும், அது பூமியின் மீதுள்ள உயிரினங்களை அழித்துவிடும் என்பதனை உறுதிப்படுத்த எவ்வித சான்றையும் எடுத்துக்காட்ட முடியாது. நோவாவும் அவரது இல்லத்தினரும் தங்களை கடந்து செல்லும் நண்பர்கள் அல்லது தங்களது உறவு முறை அங்கத்தினர்கள் ஆகியோருக்கு ஆண்டவருடைய செய்தியினை எடுத்துரைத்திருக்கக் கூடும். அவரது சொற்களை விசுவாசிக்க “காணக் கூடாத” “இன்னமும் நிகழாதவைகளின்” மீது விசுவாசம் தேவைப்பட்டது (எபி. 11:1, 7). இவ்விதமான விசுவாசம் ஆண்டவர் “இருக்கிறார்” என்பதனை ஏற்றுக்

கொள்வது மட்டுமல்லாமல் அவரை தேடுவோருக்கு அவர் “பலன்” அளிக்கிறார் என்பதனை விசுவாசிப்பதாகும் (எபி. 11:6).

தெய்வீக கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதில் இருக்கும் கடினமான பகுதி என்னவென்றால், வழக்கம் போல செயல்படுகின்ற உலகத்தின் பின் செல்லுதலை விட்டுவிடுவதாகும். குறைவான வசதிகளுடன் கூடிய பேழையில் கீழ்ப்படிந்தவர்கள் சிறை வைக்கப்பட்டனர். வீடு மற்றும் சொத்துக்கள் உட்பட உலகின் எல்லா உடைமைகள், நண்பர்கள், மற்றும் இதர உறவுகள் அனைத்தும் பின் தள்ள வேண்டி இருந்தது. நோவாவும் அவரது இல்லத்தினரும் ஐயத்திற்கு இடமின்று மற்றவர்களை கொண்டு வர முயற்சி செய்தும், ஒரு நபரை கூட சமாதானப்படுத்தி தங்களோடு பேழைக்குள் கூட்டிக் கொண்டு வர அவர்களால் இயலாமல் போனது. இந்த உலகத்தில் அவர்கள் அறிந்த மற்றும் அனுபவித்துக் கொண்டு வந்த அனைத்தும் நிரந்தரமாக அழிந்துப் போனது என்பதனை இது பொருள்படுத்துகிறது. அவர்கள் விசுவாத்தோடு பேழையில் சென்றப்போது, அவர்களது எதிர்காலத்தில் இருக்கப் போவதென்ன? எவ்விதமான வாழ்வை அவர்கள் பெறுவர்? அனைத்தையும் மீண்டும் தொடங்க வேண்டிய, முன் பின் அறியாத வேறுபட்ட உலகில் அவர்களின் முயற்சி தகுதியானதாக இருக்குமா? இதனைப்போன்ற வினாக்களும், இன்னும் பல வினாக்களும் அவர்களின் மனதில் கண்டிப்பாக நிறைந்திருந்திருக்கும்.

## ஆண்டவரில் நோவா கொண்டிருந்த விசுவாசம் (7:1)

நோவாவின் விசுவாசம் அவரை காணக்கூடாதவைகளை காணச் செய்ததென எபிரெய நிருபத்தின் ஆக்கியோன் உறுதிப்படுத்துகிறார்:

> விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக் குறித்து தேவ எச்சரிப்புப்பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான்; அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானான் (எபி. 11:7).

மக்கள் அவர்களின் பாவத்தை விட்டு ஆண்டவரிடம் மனந்திரும்ப, அவர்களை வேண்டிக் கொள்வதற்கு தேவையான எவ்வித தியாகத்தையும் செய்யும் அளவிற்கு அந்த எதிர் வரக்கூடிய பெருவெள்ளம் விசுவாசத்தினால் அவருக்கு மிகவும் உண்மை யானதாக தெரிந்தது. பரிகாசம் மற்றும் அவருடைய செய்தியை ஏற்க மறுத்தவர்களின் எதிர்ப்பின் நடுவிலும் அவர் பேழை கட்டுவதனை தொடர்ந்தார் (காண்க 1 பேதுரு 3:20).

நீதி என்பது நோவா தம்மால் பெற்றடைந்ததோ அல்லது தனது நற்செயல்களால் கிடைக்கப்பெற்றதோ அல்ல. மாறாக அது ஆண்டவர்

மேல் அவர் கொண்ட விசுவாசத்தினால் வந்த பலனாக இருந்தது (பிற்காலத்தில் ஆபிரகாம் பெற்றதனைப் போன்று; 15:6; ரோமர் 4:1-3) தன்னை காப்பாற்றிக்கொள்ள தன் சொந்த செயல்களின் மேலும் முயற்சியின் மேலும் நம்பிக்கை வைக்காமல், ஆண்டவரை விசுவாசித்து மற்றும் அவரது கவனிப்பு மற்றும் பாதுகாப்பின் கீழ் தன்னை அர்ப்பணிக்கும் மனிதனாக நோவாவை ஆண்டவர் கண்டார். பேழையை கட்டியெழுப்பும் நோவாவின் கீழ்ப்படிதலானது, ஆண்டவருடைய கிருபையை அடிப்படையாகக் கொண்ட விசுவாச நடக்கையின் நிறைவினால் வந்ததாகும் (6:8, 9). ஆகையால் ஆண்டவர் அவரை “நீதிமானாக” (எண்ணினார்) கண்டார்.

## பேழையினை கட்டினதின் கால அளவு (7:6)

பேழையினை கட்டியெழுப்ப எவ்வளவு காலம் சென்றது எனும் வினாவோடு ஆதியாகமம் 5:32 மற்றும் 7:6 ஆகிய வசனங்கள் தொடர்புடையதாக இருக்கிறது. இந்த வசனங்களை புறந்தள்ளி, சிலர் 6:3ஐ அடிப்படையாகக் கொண்டு 120 ஆண்டுகள் எனும் முடிவிற்கு வந்து விடுகின்றனர். எப்படியாயினும், ஆண்டவர் உலகத்தை அழிப்பதற்கு முன்னர் கிருபையின் காலத்தை மட்டுமே அறிவிக்கிறார். பேழை கட்டுவதனைப் பற்றி இந்த வசனம் எதையும் கூறுவது கிடையாது. மேலும், ஆண்டவருடைய சொற்கள் எந்தவொரு குறிப்பிட்ட மனிதரைக் குறித்தும் கூறப்பட்டதல்ல. அவர் தமது தீர்மானத்தை நோவாவிற்கு வெளிப்படுத்துவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே பூமியை அழிக்க முடிவெடுத்துவிட்டார்.

ஆண்டவர் நோவாவிற்கு பேழையை கட்ட கட்டளையை கொடுத்தபோது, அவரோடு உடன்படிக்கை செய்து கொள்வதாக வாக்குப்பண்ணினார்; மற்றும் நோவா அவருடைய மனைவி யோடும், அவரது மகன்கள் மற்றும் அவர்களுடைய மனைவி யரோடும் பேழையில் செல்வார்களென கூறினார் (6:18). அவரது மூத்த மகன் பிறப்பதற்கு இருபது ஆண்டுகளுக்கு முன் ஆண்டவர் நோவாவிடம் பேசினார் எனும் ஊகமே பேழையை கட்டியெழுப்ப 120 ஆண்டுகள் சென்றது எனும் கருத்தினை ஒருவர் நிலைநிறுத்தும் வழியாக இருக்கிறது. ஆனால் நோவாவிடம் ஆண்டவர் பேசுவதற்கு முன்னரே அவரது மூன்று பிள்ளைகளும் பிறந்து வளர்ந்து மணம் முடித்துவிட்டிருந்தனர் என்பதே மிகவும் இயல்பானதாகக் காணப்படுகின்றது.

நோவாவின் முதல் மகன் அவர் 500 வயதாக இருக்கையில் பிறந்தார் (5:32). அவரது மூன்று பிள்ளைகளின் பிறப்பிற்கிடையே ஒரு சில ஆண்டுகள் சென்றது (காண்க 10:21; 11:10) மற்றும் அவர்கள் வளருவதற்கும் மணம்முடிப்பதற்கும் ஒரு இருபத்தைந்து ஆண்டுகள் கடந்திருக்கக் கூடும், எனவே நோவா 525 வயதாக இருக்கும் போது

ஆண்டவர் அவரிடம் பேசினார் என்பதே; கிடைக்கப் பெறும் முதல் தகவல். நோவா 600 வயதான போது பூமியின் மீது பெருவெள்ளம் வந்ததாக வசனம் கூறுகிறது (7:6). ஆக நோவாவும் அவரது புதல்வர்களும் பேழையினை கட்டியெழுப்ப எடுத்துக் கொண்ட நெடுங்காலம் சுமார் 75 ஆண்டுகளாகும். எப்படியாயினும் கட்டியெழுப்பும் காலம் ஒருவேளை இதனை விட மிக குறைவாக இருந்திருக்கக்கூடும்.

---

இறுதிக் குறிப்புகள்

[1]ஆதியாகமம் 17:9-14 நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுதற்கு முன்னரே விருத்தசேதனமும் முக்கிமானது என குறிப்பிடுகிறது. இது ஆண்டவருடைய உடன்படிக்கையின் மக்களுக்கு அடையாளமாக இருந்தது. இது மோசேயின் மூலமாக தொடங்கப்படாமல், ஆபிரகாமின் மூலம் தொடங்கினதாகும். [2]ஆதியாகமம் 4:4ல் ஆரம்பித்து “நாற்பது” எனும் எண் வேதத்தில் முக்கியமானதாக இருக்கிறது (காண்க யாத். 16:35; 24:18; 34:28; எண். 13:25; 32:13; நியா. 3:11; 5:31; 8:28; 2 சாமு. 5:4; 1 இராஜா. 11:42; 19:8; மத். 4:2; அப். 1:3; 7:23, 30, 36; 13:21). [3]நோவாவும் அவரது இல்லத்தினரும் பேழைக்குள் செல்வதற்கு முன் அக்காலத்து மக்கள் என்ன செய்து கொண்டிருந்தனர் என்பதனை மத்தேயு 24:37-39 ஆகிய வசனங்கள் விவரிக்கிறது. இயேசுவின் இந்த அறிக்கைக்கு கூடுதலாக இக்காலத்தில் என்ன நிகழ்ந்திருக்கும் என்பதற்கு யூத இலக்கியங்களில் எண்ணிக்கையில் அடங்காத யூகங்கள் பல அடங்கியுள்ளது. (Kenneth A. Mathews, *Genesis 1—11:26*, The New American Commentary, vol. 1A [Nashville: Broadman & Holman Publishers, 1996], 374.) [4]காண்க “The Jewish Calendar” in Coy D. Roper, *Exodus*, Truth for Today Commentary (Searcy, Ark.: Resource Publications, 2008), 187. [5]இந்த வசனத்தில் சந்திரனை வைத்து ஆண்டானது கணக்கிடப்பட்டிருந்தால் டுள்ளது (354 நாட்கள்), ஆக நோவா பேழையில் இருந்த காலம் (ஒராண்டு பத்து நாட்கள்) ஒரு சூரிய ஆண்டிற்கு சமமாகும் (365 நாட்கள்). (John H. Walton, Victor H. Matthews, and Mark W. Chavalas, *The IVP Bible Background Commentary: Old Testament* [Downers Grove, Ill.: InterVarsity Press, 2000], 38.) [6]எடுத்துக்காட்டாக, “மதகுகள்” திறக்கப்பட்டு வானத்து தண்ணீர்கள் கட்டவிழ்த்து விடப்படும் வரை அதனை ஒரு “திட குவிமானம்” அதனை தாங்கி பிடித்துக் கொண்டிருந்ததெனும் பழம்பெரும் கருத்தினை John E. Hartley மேற்கோள் காட்டியிருக்கிறார். (John E. Hartley, *Genesis*, New International Biblical Commentary [Peabody, Mass.: Hendrickson Publishers, 2000], 45, 103.) [7]Victor P. Hamilton, “אֲרֻבָּה,” in *TWOT*, 1:68. [8]H. Kosmala, “גָּבַר,” in *Theological Dictionary of the Old Testament*, trans. John T. Willis, ed. G. Johannes Botterweck and Helmer Ringgren (Grand Rapids: Wm. B. Eerdmans Publishing Co., 1975), 2:367–69. [9]உலகிலுள்ள உயர்ந்த மலைகள் மீதெங்கும் மீன் தொல்பொருள்கள் காணப்படுவது கவனத்திற்குரியதாகும். இவைகளை ஒருவர் உலகளாவிய பெருவெள்ளத்திற்குப்பின் என எதிர்பார்க்கக் கூடும். [10]காண்க John H. Walton, *Chronological and Background Charts of the Old Testament*, rev. and exp. (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1994), 100–101.